THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Detailed investigation is yet to be made.

(*c*) Construction of an anicut across Nasunniar and utilizing the flow in the river is under consideration.

SRI A. VEDARATHNAM : கனம் அமைச்சர் அவர்கள் இப்பொழுது சமீபத்தில் ஏற்பட்டிருக்கிற சிறிய நீர்ப்பாசன வசதிக் கமிட்டியின் தலைவராக இருக்கிற காரணத்தினாலும் இதுபோன்ற நிலங்கள் சுமார் 40,000 எக்கர் தஞ்சையில் இருக்கிற காரணத்தினாலும் இப்படி சிறிய திட்டங்களை எடுத்து 500, 1000 எக்கர் என்று அபிவிருத்தி செய்வதை விட ஒரு பெரிய திட்டம் ஏற்படுத்தி அதன் மூலம் எல்லா நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கு ஏதாவது ஒரு நல்ல திட்டம் அமைக்க சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் திட்டத்தைப் பொறுத்த மட்டில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதோடு இந்த நிலங்களை சாகுபடி செய்வதற்கு அவைகள் அதற்கு லாயக்காக இருக்கிறன்றனவா என்று கவனிக்க வேண்டியிருக்கிறது. விவசாய இலாகா இதை பரிசீலனை செய்ததில் முதலில் பசுந்தாள் பயிர் செய்து அதற்கப்புறம் சாதாரண சாகுபடிக்கு லாயக்காக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இவைகளை எல்லாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை வட்டாரத்தில் நசுனியாறு தண்ணீர் தேங்குகிற காரணத்தினாலும் அது கடலில் சென்று கலக்க வேண்டிய வாய்க்கால்கள் இல்லாத காரணத்தினாலும் பல குறைபாடுகள் அந்த வட்டாரத்தில் வளர காரணமாகிறது. ஆகவே உடனடியாக அங்கு தண்ணீர் தேங்காமல் இருக்க வழி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறது.

SRI R. SRINIVASA IYER : Sir, may I know the area in acres referred to under clause (*a*), viz., Alayathikkadu in Eripurakarai and Thambikkottai villages in Pattukkottai taluk?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir, it refers to Alayathikkadu forest area.

MR. SPEAKER : I think the hon. Member wants to know the extent of the area. If the information is readily available the Hon. Minister can give it. Am I right, Mr. Srinivasa Iyer?

SRI R. SRINIVASA IYER : Yes, Sir. I want to know the extent of the area.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It will cover an area of about 2,000 acres.

Pandya State

* 134 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஜில்லாக்கள் கொண்ட பாண்டிய ராஜ்யம் அமைக்க நடைபெறும் முயற்சி சர்க்காருக்குத் தெரியுமா ?

10th September 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI N. R. THIAGARAJAN : சென்னை சுற்றுப்புறங்களில் பாண்டிய நாடு அமைக்கவேண்டும் என்று பலமான கிளர்ச்சி, புரட்சி இவைகள் எல்லாம் தோன்றும்போல் தெரிகிறது. ஆகவே அதன் பேரில் சர்க்கார் பாண்டிய நாடு அமைப்பதற்கு முயற்சி செய்கிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது குறுகிய ராஜ்ய மனப்பான்மை. இதைப்பற்றி சர்க்கார் நடவடிக்கை ஒன்றும் எடுக்கவில்லை.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி இவைகள் உள்ளடங்கிய ஒரு பாண்டிய ராஜ்யம் அமைத்து அதற்கு பழைய கட்டபொம்மனை போன்று ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்று திரு. தியாகராஜன் அவர்கள் முயற்சிப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படி செய்தாலும் இப்போது ராஜா கிடைப்பது கஷ்டம். இப்போது ஜனநாயக ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

SRI V. SANKARAN : மேற்படி ஜில்லாக்களில் பாண்டிய நாடும் வேண்டாம், கொங்கு நாடும் வேண்டாம், திராவிட நாடும் வேண்டாம், ஐக்கிய இந்தியாவே இருந்தால் போதும் என்று ஒரு எதிர் கிளர்ச்சி இருந்து வருவது சர்க்காருக்குத் தெரியுமா ?

(No answer.)

Integrated Medicine

* 135 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to question Nos. 110-E and 110-F answered on 8th November 1957—

(*a*) whether the Government have framed rules and regulations to implement the Madras Registration of Practitioners of Integrated Medicine Act, 1956 (Madars Act No. XXVII of 1956) and constituted a new Board of Integrated Medicine ; and

(*b*) if not, the reasons for the delay?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) Orders constituting "The Board of Integrated Medicine" under section 3 of the Madras Registration of Practitioners of Integrated Medicine Act, 1956, have already been issued. The work of drafting the rules under section 15 of the Act is nearly complete and the rules will be issued soon.

MR. SPEAKER : I think the Hon. Minister can answer the next question also, so that we can take both the questions together.

SRI M. KALYANASUNDARAM : These two questions relate to different subjects. So, they may be taken up separately.

MR. SPEAKER : All right.

SRI M. KALYANASUNDARAM : May I know the cause for the inordinate delay in drafting the rules and also in constituting the Board?